# *சாராம்சம்*


## கொழும்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம்

# இலங்கை அரசின் மீதான மோசடி

## *பிறர் சார்பில் பதியப்பட்ட இலங்கையின் முதலாவது வழக்கு*

*கூகுள் புத்தகங்கள்:* - **'Colombo Hilton Hotel Construction - Fraud on Sri Lanka Government – Vol. 1 – Sri Lanka's First Derivative Action in Law'**

**http://www.consultants21.com/page-1-derivative-actions-in-law.php**




***அளவு - 8.25" X 11" - பக்கங்கள் 500***

*இப்புத்தகமானது 1983ம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட காட்டுமிராண்டித்தனமான இனக்கலவரத்தின் பின்னர் சர்வதேச ரீதியில் இலங்கை ஒரு காட்டுமிராண்டித்தனமான நாடு என்று இருந்த பெயரை மாற்றி நாட்டின் மீதான நம்பிக்கையை மீள கட்டியெழுப்பும் முகமாக ஹில்டன் ஹோட்டல் திட்டத்திற்கு ஜே ஆர் ஜயவர்தன ஜனாதிபதி அவர்கள் கொடுத்த ஊக்குவிப்பையும் உதவியையும் வெளிக்கொணர்வதோடு இலங்கை அரசிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரிய மோசடியையும் வெளிச்சம் போட்டு காட்டுகின்றது.*

*இலங்கையில் முதற்தடவையாக ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்தை நடைமுறைப்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் ஒரு தனியார் கம்பெனிக்கு சர்வதேச கடன் பெறுவதற்கு அரச உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அப்போதைய பிரதமர் ஆர்.பிரேமதாச அவர்களினால் கொழுப்பு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானத்திற்க்கென கொழும்பு நகரின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக 30 வருடங்களுக்கு வட்டி செலுத்த தேவையற்ற சலுகை வசதியுடன் 99 வருடங்களுக்கான குத்தகைக்கு காணி ஒதுக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து 1984ம் ஆண்டு கோர்னெல் அன்ட் கோ பிரதான மேம்படுத்தாளாராகம் டெல்மெஜ் போர்சித் கோஜி முகாமைத்துவ ஆலோசகரும் வழக்கறிஞர் எம்.ராதாகிருஷ்ணன் போன்றெளர் ஏனைய மேம்படுத்தாளார்களாகவும் அமெரிக்க ஹில்டன் சர்வதேச நிறுவனத்தின் தொழிநுட்ப உதவியுடனும் ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் ஆரம்பமானது இதன்போது சர்வதேச புகழ் வாய்ந்த சர்வதேச நிறுவனங்களான மிட்சுய் அன்ட் கோ டைசுய் கார்பொரேஷன் முற்றாக தளபாட வசதிகளுடன் கட்டுமானத்தை செய்தவேளைஇ இலங்கை அரசின் உத்தரவாதத்தின்பேரில் அதிக பங்குகளை கொண்டிருந்த வரையறுக்கப்பட்ட ஹோட்டல் டிவலபேர்ஸ் நிறுவனம் வாங்கப்பட்டு அதற்கு தவணை முறையில் மீள் செலுத்தும் வகையில் கடன் வசதி கொடுக்கப்பட்டது. ஜப்பானின் புகழ் பெற்ற கட்டிட கலை நிறுவனங்களான காங்கோ கிகாகு செக்கெய்ச்சா மற்றும் யோசோ சிபாட்டா கூட்டுத்தாபனம் போன்றன ஹில்டன் ஹோட்டலின் கட்டிட கலைஞர்களாக செயற்பட்டார்கள்.*

*வரையறுக்கப்பட்ட ஹோட்டல் டிவலோபெர்ஸ் லங்கா வின் உரிமையின் கீழிருந்த ஹில்டன் ஹோட்டல் 1987ம் ஆண்டு சிறப்பான கொண்டாட்டங்களுடன் ஜனாதிபதி ஜே ஆர். ஜயவர்தன மற்றும் பிரதமர் ஆர்.பிரேமதாச இன்னும் பல முக்கியஸ்தர்களின் பங்குபற்றுதலோடு தனது செயற்ப்பாட்டை ஆரம்பித்தது.*

*கீழுள்ள படக்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஹில்டன் ஹோட்டல் திட்டமானது 3 கோபுரங்களையும் 19மாடிகளையும் 684 அறைகளையூம் உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டது. அடித்தளங்களானது 450 வாகனங்கள் தரிக்கத்தக்கதாகவும் மண்டபம் உணவகங்கள், விலையுயர்ந்த கடைகள்,இளைப்பாறும் இடங்கள்,தொடர்பாடல் நிலையம்.நீச்சல் தடாகம் விளையாட்டு நிலையம் போன்ற ஹோட்டல் ஒன்றுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டிருந்தது.*



*எவ்வாறாயினும்,முதலாவது கட்டத்தில் இரண்டு கோபுரங்கள் மட்டுமே நிர்மாணிக்கபடவிருந்தது,இதன்போது இரண்டாவது கட்டத்தில் மூன்றாவது கோபுரத்தை இலகுவாக கட்டும் வகையில் மூன்றாவது கோபுரத்திற்கான முழுமையான அடித்தளமும் இரண்டு தூக்கிகளுக்கான கிணறுகளும் செய்யப்பட்டன. அதற்கமைய ஹில்டன் ஹோட்டலின் முதலாவது கட்டத்தில் 2கோபுரங்களும் 19 மாடிகளுடன் 456 அறைகளை கொண்டிருக்கும்.*

*இலங்கை அரசின் உத்தரவாதத்தின் பேரில் பெற்ற ஜப்பானிய கடன்களை மீள்செலுத்தும் திராணியை எடுத்துக்காட்டும் வகையில் அமெரிக்க ஹில்டன் சர்வதேசமனாது 2கோபுரங்களையும் 19 அறை மாடிகளையும் 456 அறைகளையும் கொண்ட ஹில்டன் ஹோட்டலின் இலாபத்தை எதிர்வுகூறி அட்டவணைப்படுத்தியிருந்தது.*

Extracts from Mitsui & Co. Ltd.'s Profitability Forecast & Cash Flow Projections of October 1983 **–**
**456 Guests Rooms**

| Year | | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|
| Total No. of Rooms (Room Days) Available (for year) i.e. 456 Rooms x 365 Days | (A) | 166440 | 166440 | 166440 |
| Room Occupancy - % | (B) | 65% | 70% | 75% |
| Average Room Rate – US $ | (C) | 73.00 | 78.84 | 85.15 |
| Room Revenue – US$ ' 000 (A) x (B) x (C) | | 7898 | 9185 | 10629 |
| Net Funds Available US $ '000 | | 5180 | 6403 | 7651 |
| Jap Yen '000 (1 US$ = 230 Jap Yen) | | 1191400 | 1472690 | 1759730 |

*எனினும் 1987ல் தனது செயற்ப்பாட்டை ஆரம்பித்த ஹில்டன் ஹோட்டலின் கணக்குகளின் அடிப்படையில் 17அறை மாடிகளும் 387அறைகளுமே காணப்பட்டதாக வெளிக்கொணரப்பட்ட போது, HDL ன் நிர்வாகி என்ற முறையில் ஆசிரியர் அதனை கேள்விக்குட்படுத்தினார்.*

| | | | |
|---|---|---|---|
| No. of Rooms (Room Days) Available (For Year) i . e. 387 Rooms x 365 Days | 141255 | 141255 | 141255 |
| Room Occupancy | 20% | 30% | 40% |
| Average Room Rate US$ | 40.0 | 50.0 | 60.0 |
| Room Revenue - US$ '000 | 1130 | 2119 | 3390 |
| Total Revenue - US$ '000 | 4800 | 5298 | 7614 |
| Gross Operating Profit - US$ ‘000 | 0 | 350 | 1904 |
| G.O.P. Rate | 0 | 0 | 25% |
| Net Funds Available - US$ '000 | 0 | 0 | 1421 |

*இந்த சூழ்நிலையில் நிதியமைச்சின் உதவியோடு HDL ன் நிர்வாகி என்ற அடிப்படையில் ஆசிரியர் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டார். இதன்போது கண்டுபிடிக்கப்பட்ட உண்மை எதுவெனில்,1983ம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட கட்டட வரைபின் அடிப்படையிலேயே 1984ம் ஆண்டு ஹில்டன் ஹோட்டல் கட்டுமானப்பணி ஆரம்பமானது .*

Ministry of Local Government, Housing and Construction

නාගරික සංවර්ධන අධිකාරිය
நகர அபிவிருத்தி அதிகாரசபை
urban development authority

Telephones 92021, 91368, 92296, 92768, 596271
P. O. BOX 1895
27, D R Wijewardena Mawatha, Colombo 10

Ref: 02/20/523/83

5th March 1984

Project Co-ordinator,
Hotel Developers (Lanka) Ltd.,
16, Alfred Place,
Colombo - 3.

Dear Sir,

Proposed Hilton Hotel Project at
Echelon Square Colombo 1.

Reference your building application dated 19.10.83 submitted to this Authority.

I have to inform that your plans are approved subject to the following conditions:-

XXXXXXXXXXXX


A set of approved plans duly certified is sent herewith and the building permit will be issued in due course. Please submit 3 additional copies of the plans to enable the permit to be issued.

Yours faithfully,
Sgd/ R.Paskaralingam,
Chairman,
Urban Development Authority

G. L. D. de Silva
Dy.Director (Dev.Reg.)


c.c: 1. Municipal Engineer. Col.
2. Chief Officer, Fire Brigade Col.

*ஆனால் நகர அபிவிருத்தி அதிகார சபை கொடுத்த சான்றின் அடிப்படையில் 1986ம் ஆண்டு குறித்த கட்டிட வரைபு இரகசியமான முறையில் மாற்றப்பட்டிருந்தது. மேலும் ஆரம்பத்திலே அனுமதியளிக்கப்பட்டிருந்த கட்டிட வரைபின் பிரதியானது நகர அபிவிருத்தி அதிகார சபையிலோ, கொழும்பு மாநகர சபையிலோ வேறெந்த சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலோ இருக்கவில்லை என்பதும் வெளியானது.*



URBAN DEVELOPMENT AUTHORITY
DEVELOPMENT REGULATIONS DIVISION
APPROVED PLAN
SUBJECT TO THE CONDITIONS LAID DOWN
IN PERMIT No. 02/20/523/83
DATED 29-09-86
Chairman U.D.A.

*HDL* தலைமை காரியாலயத்தில் இருந்த நகர அபிவிருத்தி சபை அனுமதியளித்த கட்டிட வரைபின் அசல் சூழ்ச்சிகரமான முறையில் ஜப்பானிய கட்டிட கலைஞர்களான காங்கோ கிகாகோ சேகெய்சா மற்றும் யோசோ சிபாடா ஸ்தாபனங்களால் வாக்கப்பட்ட அதேவேளை ஹில்டன் ஹோட்டல் கட்டுமான உப காரியாலயம் அதிர்ச்சிகரமான முறையில் தீப்பற்றுக்குள்ளாகி உபகரணங்கள் திட்டங்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் முற்றாக அழிவடைந்தன என்று அறிக்கை வெளியானது.



Photocopy Obtained from File HDC Office (14)
File UDA Permits & Approvals LJH/HP/1/4

The original of the letter given by the UDA on 23/March/84 (Ref. 02/20/523/83 on building permit) is with Mr. Kitagawa KKS together with the approved set of plans.
27/7/90

Approved plans by UDA:
A-01
A-02
A-03
A-04
A-20
A-21
A-22
A-23
A-24
A-25
A-26
A-27
A-30
A-31
with Mr. Kitagawa of KKS.

Approved by Fire Dept.:
C-01
A-09
A-19
A-20
A-21
A-22
A-28
with C.W. of HDL.

The original of the letter given by UDA on 23/3/84 Ref 02/20/523/83 was got burned in the fire that occurred in the site office in 1984 together with the originally approved plans. Later amended plans were submitted & approval obtained. The approved plans are with Mr. Kitagawa of KKS.

பின்னர் கொழும்பு கோட்டை பொலிஸ் அறிக்கையில் உள்ளவாறு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு கொழும்பு கோட்டை பொலிஸ் வழங்கிய சான்றில் தீயானது ஒரு சோடிக்கப்பட்ட சம்பவம் என குறிப்பிடப்பட்டிருந்தது.

REPORT FROM MITSUI TAISEI CONSORTIUM

Report on the fire-incident which occurred on 18th October 1985 at the Hilton Hotel Site

XXXXXXXXXXXXX

(3) All drawings and documents got burnt. Our principles in Tokyo dispatched all drawings, documents etc., they possessed, which arrived in Colombo on 26.10.85 to replace the ones that got burnt.

*மேலதிகமாக தளபாடங்கள் உபகரணங்கள் என்பவற்றை உறுதிப்படுத்தி சரியாக கணக்கிடும் கொள்வனவு ஒப்பந்த ஆவணங்கள் மாயமான முறையில் காணாமறற்போனது. கொழும்பு ஹில்டன் ஹோட்டலுக்கு வழங்கப்பட்டிருந்த தளபாட உபகரணங்கள் தொடர்பில் சரியான மதிப்பீடொன்றை செய்வதற்கு இது பாரிய சவாலாக அமைந்ததுமன்றி செய்ய முடியாமலும் போனதற்கு காரணமாயிற்று.*

*இந்த மோசடியானது ஆதாரங்களை கொண்டிருந்த இயக்குனரான ஆசிரியரால் இயக்குனர் சபையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் உரிமை கம்பெனியான HDL ன் இயக்குனர் சபையானது இந்த விடயம் தொடர்பில் ஊமையாக இருந்ததுடன் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காது கேள்விக்குரிய முறையில் மௌனம் சாதித்தனர்*

*இலங்கை அரசாங்கமானது வழங்கியிருந்த உத்தரவாத்திற்கு மேலதிகமாக மிகவம் புதிரான முறையில் 1989ம் ஆண்டு ஜப்பானிய நிறுவனங்கள் கொழும்பு ஹில்டன் ஹோட்டலை தமக்கு குத்தகைக்கு எடுத்துக்கொள்ளும் வகையில் ஒரு ஒப்பந்தத்தை கையொப்பமிட்டுக்கொண்டார்கள். இந்த முயற்சியை HDL ன் இயக்குனரும் இலங்கை அரசின் பொருளாதார விவகாரங்களுக்கான மேலதிக இயக்குனருமான வைத்திய கலாநிதி ஏ.சி.ரந்தெனி அவர்களின் உதவியூடன் HDL ன் இயக்குனரான இந்நூலாசிரியர் வெற்றிகரமாகவும் பலமுடனும் எதிர்த்தார். 1990ம் ஆண்டு இந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது.*

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

Janadhipathi Mawatha,
P. O. Box 590,
Colombo-1.
Telegrams: 'CENTRABANK'

29-11-1989

My No. } Strictly Confidential

Your No. } 24th November, 1989.

Mr.R. Paskaralingam,
Secretary,
Ministry of Finance,
Colombo.

Dear Sir,

Proposal to Mortgage the Assets of Hotel Developers Ltd.

"Dr. Randeni referred to the request made by Mr. Nihal Amarasekera at the Board Meeting held on 30th October, to table the agreements signed by HDL with respect to the postponement of loan repayments due upto the end of 1989, and said that he received the copies of the documents signed by HDL.

XXXXXXXXXXXX

Yours faithfully,

Dr.A.C.Randeni,
Additional Director of Economic Research and
Director of Hotel Developers Ltd.
representing the General Treasury.

*இந்த பின்னணியில் சமூக அரசியல் பலம் பொருந்திய இரண்டு ஜப்பானிய நிறுவனங்களுக்கு எதிராக HDL ன் பங்குதாரர் என்ற வகையில் நூலாசிரியர் HDL சார்பாக 1990ம் ஆண்டு கொழும்பு மாவட்ட நீதிமன்றில் இலங்கையில் முதன்முறையாக மற்றவர்கள் சார்பிலான வழக்கொன்றை தாக்கல் செய்தார்.*

*HDL* இற்கு சார்பாக நீதிமன்றின் தீர்ப்பை பெரும் நோக்கில் பிறருக்கெதிரான வழக்குத்தாக்கலின் வழக்கத்தினை பூர்த்தி செய்யும் வகையிலும் *HDL* பிழையாக நடந்துகொண்டதினிமித்தமும் *HDL* ம் அதன் இயக்குனர்களும் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டார்கள்.

உடனடியாகவே *1990*ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பு மாவட்ட நீதிமன்றானது உத்தரவாதியான இலங்கை அரசு அனுமதித்தபடி கொழும்பு ஹில்டன் ஹோட்டல் நிர்மாணிக்கப்படாத காரணத்தால் இரண்டு ஜப்பானிய கம்பெனிகளுக்கும் *HDL*லோ அல்லது இலங்கை அரசின் உத்தரவாதத்தை கீழோ எந்தவொரு கொடுப்பனவுகளும் செலுத்தப்படக்கூடாது என்று ஓர் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்தது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த வழக்கிலே ஓர் இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்ததானது இது சட்டத்திற்கு முரணான செய்கை நடந்திருப்பதை உறுதி செய்வதாக அமைந்திருந்ததுமன்றி *HDL* இயக்குனரான நூலாசிரியரின் ஆட்சேபனைகளையும் கருத்திற்கொள்ளாது *KPMG Ford*, Rhodes Thronton & Co ஆகிய பட்டயக்கணக்காளர் நிறுவனங்கள் மோசடியான முறையில் மேலே குறிப்பிடப்பட்ட மோசடியை மறைக்கும் முறையில் *HDL* ன் வருடாந்த ஆய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளை உறுதிப்படுத்தியிருந்தன.

## Hotel Developers (Lanka) Ltd.

**REPORT OF THE AUDITORS**

**To The Members of Hotel Developers (Lanka) Limited**

**We have examined the balance sheet of Hotel Developers (Lanka) Limited, as at 31st March 1990 and the related statement of profit and loss for the period then ended. Our examination was made in accordance with Sri Lanka Auditing Standards. We have obtained all the information and explanations which to the best of our knowledge and belief were necessary for purposes of our audit.**

**In our opinion, so far as appears from our examination, proper books of accounts have been maintained by the company and to the best of our information and according to explanations given to us, the balance sheet and statement of profit and loss which are in agreement therewith read together with the notes referred, provided the information required by the Companies Act, No. 17 of 1982, and subject to note 19 to the Accounts, give a true and fair view of the state of affairs of the Company as at 31st March 1990 and of its loss for the year then ended in conformity with generally accepted accounting principles applied on a basis consistent with that of the previous year.**

**We further report that, according to information available to us, no Director of the company is directly or indirectly interested in a contract with the company other than those disclosed in Note 18 to the accounts.**

**Ford Rhodes, Thornton & Company**
*Chartered Accountants*
28th November, 1990

இந்த நடவடிக்கையானது *HDL*ன் இயக்குனரான நூலாசிரியர் ஜனவரி *1991*ம் ஆண்டு இன்னுமொரு பிறர் சார்பான வழக்கொன்றை *HDL* ன் மோசடியான நிதியாண்டு கணக்கறிக்கைக்கெதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்தபோது கொழும்பு மாவட்ட நீதிமன்றானது அக்கணக்கறிக்கை மீதான தடையுத்தரவொன்றை பிறப்பித்தது.

இதனை தொடர்ந்து *HDL* ன் இயக்குனரான நூலாசிரியர் *KPMG Ford, Rhodes Thronton & Co* ஆகிய நிறுவனங்களும் இவ்வழக்கின் பிரதிவாதிகளாக பட்டியலிடப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தார். எவ்வாறாயினும் மேலே குறிப்பிட்ட பின்னணியினையும் உண்மையையும் விளங்கிக்கொண்ட சட்டமா அதிபர் இந்த வழக்கை எதிர்க்காமலிருக்க தீர்மானித்தார்.

பாரிய தவறாக வெளிக்கொணரப்பட்ட உண்மை எதுவெனில் கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் உரிமை நிறுவனமான *HLD* ன் இயக்குனர்களும் *HLD* ன் கணக்காய்வாரள்களான *KPMG Ford, Rhodes Thronton & Co* பட்டயக்கணக்காளர் நிறுவனங்களும் கூட்டாக ஒரு கச்சேரியை போல இந்த மோசடிக்கு பக்கச்சார்பாக நடந்துகொண்டுள்ளார்கள் என்பதேயாகும்.

பின்னர் *1996*ல் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்ற தீர்ப்புகளில் ஒன்றாக *KPMG Ford, Rhodes Thronton & Co* ஆகிய நிறுவனங்கள் *HDL* ன் கணக்காய்வாளர்கள் என்ற பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் எனவும்

*குறித்த நிதியாண்டு கணக்கானது மீள் தயாரிக்கப்பட்டு பிறிதொரு பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் ஆய்வு செய்யப்படவும் வேண்டும் என கூறியது.*

*நூலாசிரியரினால் 1990ல் தொடுக்கப்பட்ட முதலாவது பிரதான வழக்கை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்றானது எழுத்து மற்றும் வாய்மூல சமர்ப்பணங்களை கேட்டதன் பின்னர் ஜப்பானிய கம்பெனிகளுக்கு இலங்கை அரசின் உத்தரவாதத்தின் கீழோ அல்லது HDL இனாலோ கொடுப்பனவுகள் செய்யப்படுவதற்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்ததுடன் கீழ்வரும் குறிப்புகளையும் கவனத்திற்கொண்டது.*

- # *ஒப்பந்தக்காரர்கள் குறைந்தளவு வேலையை செய்துவிட்டு அதிக பணத்தொகையை பெற முயற்சி செய்துள்ள படியினால் வழக்குதாக்காளர் கொடுப்பனவுகள் செய்யப்பட்ட முறைமை தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளார்.*
- # *ஏனைய பிரதிவாதிகள் (இயக்குனர்கள்) குறிப்பிடப்பட்ட ஹோட்டல் வியாபாரத்தில் தொடர்புபட்டவர்களாக பணத்தை பெரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும், சரியான முறையில் பரிசோதனைகளை மேற்கொள்ள தவறியுள்ளார்கள்.;*
- # *அப்படியான சரியான பரிசோதனை முறைகளை தடை செய்ததன் மூலம் பண கொடுக்கல்களில் தாக்கம் செலுத்தியுள்ளது.*
- # *அவர்கள் சமூதாயத்தில் தாங்கள் கொண்டுள்ள அந்தஸ்த்தை பாவித்து கம்பெனியோடுகூட சேர்ந்து இந்த புத்தகங்களிலே உள்ள இந்த ஒப்பந்தங்கள்தொடர்பில் கேள்வி எழுப்புவதை தடை செய்கிறார்கள்.*
- # *இவர்களுடைய கூட்டமைப்பானது பங்குதாரர்களின் நலனுக்கு விரோதமானதுமன்றி இவ்வாறு இவர்கள் செயற்படுவதானது கம்பெனியின் பங்குதாரர்களின் தோல்விக்கு வழிவகுக்கின்றது.*

*கற்றறிந்த அன்றைய மாவட்ட நீதிபதி தனது ஏனைய விடயங்கள் உள்ளடங்கலான தீர்ப்பில் தெரிவித்ததாவது*

*"தற்போதுள்ள நிலவரப்படி பிரதிவாதிகளின் அறிக்கையின்படி அவர்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமது பங்கிற்கு செயற்பட்டதுடன் கம்பெனியின் விருப்பத்திற்கும் இணங்கினார்கள் என்பதை கொடுப்பனவுகள் செய்யப்பட்டதற்கு நியாயமாக ஏற்றுக்கொள்ள முடியாது...மாறாக வழக்கு தொடுனரால் (நான்காம் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளவர்) குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த நடைமுறையானது வெளிநாட்டு நாணயமாற்றலை தீய முறையில் இந்நாட்டை விட்டு ஒதுக்கி தள்ளும் ஒரு செயற்பாடாகும். இங்கே காட்டப்பட்டுள்ளவற்றுள் உள்ள முக்கியத்துவம் என்னவெனில், வழமையாக பணம் கொடுக்க வேண்டிய கம்பெனியே கேள்விகளை கேட்கும், மாறாக அது எதிர்த்தரப்பினர் நினைத்ததை செய்ய அனுமதிக்காதது இந்த நிலைப்பாடு சரியெனில்; இங்கே நடைபெற்றுள்ளது கூட்டான ஒரு மோசடி நடவடிக்கையாகும்."*

*இந்த வழக்கின் சிறப்பம்சம் எதுவெனில் அன்று ஹில்டன் ஹோட்டலின் உரிமை நிறுவனமான HLD இற்காக ஆஜரான அன்றைய சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சுனில் டி சில்வா குறித்த விசாரணையில் கலந்து கொள்ளவுமில்லை, நூலாசிரியரை இவ்வழக்கில் எதிர்க்கவுமில்லை.*


*இதன்பின்னர் வழக்கு தொடுனரான நூலாசிரியர் சிவில் நடைமுறை சட்டத்தின் கீழ், இந்த ஜப்பானிய கம்பெனிகளின் உரிய அனைத்து ஆவணங்களையம் தேடிக் கண்டுபிடித்து அதன் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கும் மேலும் தனது குறுக்கு விசாரணைகளுக்கு இந்த ஜப்பானிய கம்பெனிகள் பதில் கொடுக்கும்படிக்குமான உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றில் பெற்றுக்கொண்டார். எனினும் ஜப்பானிய கம்பெனிகளினால் குறுக்கு விசாரணைக்கு பதிலளிக்க முடியாமல்போனமையானது உண்மையில் என்ன நடந்தது என்பதை மிக தெளிவாக எடுத்துக் காட்டியது.*

*இதற்கு பிற்பாடு சட்டமா அதிபரான சுனில் டி சில்வாவின் ஓய்வினை தொடர்ந்து பதவியேற்ற சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தி.ஜே.மாரப்பன அவர்கள் இந்த ஜப்பானிய கம்பெனிகளோடு கூட்டு சேர்ந்ததை நிரூபிக்கும் வகையில் எல்லோரும் ஆச்சரியப்படத்தக்கவிதமாக ஒரு பொறியியலாளர் குழுவொன்றை நியமித்து ஹில்டன் ஹோட்டல் கட்டுமானம் தொடர்பாக நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டி, வழக்கு தொடுநரினை ஆட்சேபித்து மனுவொன்றை தாக்கல் செய்தார். இது சமூக அரசியல் செல்வாக்கின் யதார்த்தத்தை காட்டாமல் இருக்குமா?*

*இந்த ஜப்பானிய கம்பெனிகள் மாவட்ட நீதிமன்றினால் கொடுக்கப்பட்ட தடையுத்தரவிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தன இதனை நூலாசிரியர் எதிர்த்தவேளை, ஆச்சரியமாக மாவட்ட நீதிமன்ற விசாரணைகளில் பங்கெடுக்காத சட்டமா அதிபர் சுனில் டி சில்வாவின் ஓய்வின் பின் சட்டமா அதிபரான தி.ஜே. மாரப்பன எவ்வித நியாயமான காரணமுமின்றி மேன்முறையீட்டு நீதிமன்றில் இடையிட்டு ஜப்பானிய கம்பெனிகளின் மனுவை பரிசீலிக்க வேண்டும் என வாதிட்டார்.*

*அதைப்போலவே மாவட்ட நீதிமன்ற விசாரணைகளில் பங்கெடுக்காத HDL ன் மூன்று நிருவாகிகளும் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஜப்பானிய கம்பெனிகளுக்கு ஆதரவாக களமிறங்கியபோது இந்த கூட்டணியின் யதார்த்த நிலைமை வெளிச்சத்திற்கு வந்தது.*

*மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பில் தவறாக செயற்பட்டதாக குறிப்பிடப்பட்ட HDL இயக்குனர்களில் ஒருவரான கே.என்.சொக்சி அவர்கள் மீது தேவையற்ற முறையில் சமூக அரசியல் செல்வாக்கை பிரயோகித்தார் என்ற பாரதூரமான குற்றச்சாட்டையும் மாவட்ட நீதிமன்றம் முன்வைத்திருந்தது. எனினும் கே.என்.சொக்சியின் நடவடிக்கையின் பேறாக மேற்குறிப்பிட்ட ஜப்பானிய கம்பெனிகளின் விசாரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒப்புதல் அளித்ததோடு பங்குபற்றுவதற்கு தகுதி அற்ற ஏனைய பங்குபற்றுதலாளர்களுக்கும் அனுமதி அளித்தது. உச்ச நீதிமன்றம் அவர்களின் பங்குபற்றுதலை தடை செய்திருந்தது.*



and misrepresentations to pass, was present as a member. He was also a Director of LB Finance at the time whose Group Chairman's activities were being called into question here. In keeping with Section 9 of the Securities Council Act No: 36 of 1987, he should have disclosed his status as an interested and affected party and withdrawn from the proceedings.

Ameresekere and his battery of distinguished lawyers have established a pioneering action in the court proceedings against the directors of the company for aiding and abetting Mitsui/Taisei in their alleged attempt to defraud the shareholders, the chief of whom is the Government. The lengthy and detailed correspondence undertaken by and on behalf of Ameresekere with the SEC shows clearly, through the SEC's shallow and evasive replies, that what has happened at that end is its deliberate and determined endeavour to do nothing at all. The additional question for ordinary citizens concerns the fact that if Ameresekere -- a man of resources and tenacity, a fully-qualified accountant of stature and seniority in the profession -- cannot make himself heard by the SEC, what can the rest of us expect of this institution which has been set up to "protect the interests of investors"?

Mr. K. N. Choksy's involvement in the cover up is perhaps the most shocking of all. A Director of HDL, Choksy acted as a cat's paw of the Japanese contractors. Soon after Ameresekere informed the Board of Directors that the Colombo Hilton Hotel had been constructed on the basis of a reduced number of rooms (387 instead of 452) without prior approval or revised profitability forecasts, the Japanese Executive Director had intimated that the Japanese architects had conducted their final inspection in March 1988. In the light of the serious discrepancies that had come to light by then, a government-appointed Director, chartered accountant M. T. L. Fernando had urged the Board that an independent engineering examination and inspection be carried out, stressing the obvious connections between the Japanese contractors Mitsui/Taisei and the Japanese Architects.

It is a telling irony that in this situation the Japanese Executive Director had to seek refuge in Choksy, Member of Parliament and legal luminary in order to do his dirty work. Choksy advised the Board of Directors by letter dated 8/8/88 that it was not necessary to conduct an independent inquiry and that Mitsui/Taisei would not be bound by it. Choksy also stated that the architect's "inspection and certification is an adequate protection to both the Board and the shareholders that the construction is in order in every respect." All this on the basis of a "Completion Certificate" submitted by the architects Kanko Kikako Sekkeisha Yozo Shibata & Associates, a two paragraph letter dated 30/04/1987 without Bills of Quantities or Final Measurements to support it. It does not take an accountant, much less a legal mind, to discern that such a certificate is inadequate in the best of circumstances. In the light of the charges levelled by Ameresekere at Board Meetings and in writing, Choksy's behaviour is inexplicable except on the grounds of personal gain. In fact, on 28/02/1990 he writes reiterating his position that both the Certificate of Practical

16 — Counterpoint — December 1993

***Courtesy :*** **Counterpoint Magazine**

*உடனடியாகவே நூலாசிரியர் மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய குறித்த தகுதியற்ற மனுதாரர்களையும் அனுமதி செய்யும் விசேட மனு விசாரிப்பு மனுக்கெதிராக உச்ச நீதிமன்றில் விசேட மனு ஒன்றை தாக்கல் செய்தார். உச்ச நீதிமன்றம் உடனடியாக அந்த விசேட மனுவை கேட்க தீர்மானித்தது.*

*நூலாசிரியரின் சார்பில் முன்வைக்கப்பட்ட வாய் மற்றும் எழுத்து மூல சமர்ப்பணங்களை செவிமடுத்த உச்ச நீதிமன்றின் பிரதம நீதியரசர் ஜி.பி.எஸ். டி சில்வா நீதியரசர்கள் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.பி.அமரசிங்க மற்றும் கே.எம்.எம்.பி. குலதுங்க ஆகியோர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் இடைக்கால தீர்ப்பினை உறுதி செய்ததோடு, மனுதாரர் இது ஒரு கூட்டான மோசடி என்பதை ஆதாரபூர்வமாக கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நிரூபித்துள்ளார் என்றும் இன்னும் பல அம்சங்கள் அடங்கிய தீர்ப்பில் கீழுள்ள பல விடயங்களை சுட்டி காட்டினர்.*

*1992ம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பானது வரலாற்றில் மைல்கல்லான ஒரு தீர்ப்பாக அரசாங்கத்தையும் கண்டித்து உத்தரவாதி என்றவகையில் இலங்கை அரசு அலட்சியமாக நடக்க முடியாது என்று சுட்டி காட்டியதுடன் HDL இன் இயக்குனர்களாக இருந்த அரசாங்க இயக்குனர்களும் அலட்சியமாக இருக்க முடியாது என தீர்ப்பளித்திருந்தது.*

- # *மனுதாரர் (நான்காம் பிரதிவாதி) வெற்றிகரமாக தனக்கு சட்டரீதியான உரிமை உள்ளது எனவும், இந்த நடவடிக்கைகளில் தீவிர கேள்விகள் உள்ளதையும் பிழை செய்பவர்களின் ஆதிக்கத்தையும் நிலைநாட்டியுள்ளதுடன் Hனுடு ற்கு கிடைக்கவேண்டிய அனுகூலம் கிடைக்க வேண்டும்*
- # *மனுதாரர் (நான்காம் பிரதிவாதி) முன்வைக்கப்பட்ட வாதங்கள் மற்றும் கோரிக்கைகளின் மற்றும் பிரதிவாதிகளின் சமர்ப்பணங்கள் என்பவற்றின் அடிப்படையில் நியாயமான வாய்ப்பை தக்க வைத்துள்ளார்*
- # *மனுதாரர் (நான்காம் பிரதிவாதி) வெற்றிக்கான வாய்ப்பை கொண்டுள்ளது உண்மை அது போலியற்றது மற்றும் வெறுமனே வாதிடுவதற்கு மேலான ஒரு விடயம் அவரிடம் உள்ளது.*
- # *இந்த வழக்கின் சூழ்நிலையின் நிமித்தம் இயக்குனர்களாலோ இயக்குனர் சபையின் அரச பிரதிநிதிகளாலோ உதவவோ அல்லது இடைப்பட்ட முடியாத நிலை*

# *பணமானது HDL விட்டும் நாட்டை விட்டும் வெளியேறுவதை தடுக்கவே இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

# *இடைக்கால தடையுத்தரவானது HDL ஐ பொறுத்தவரை அப்புலியா அஸ்கியூளும் யுத்தத்தின் பின் பிரர்ஸ் கூறியதை போல மேலும் "அப்படியான ஒரு வெற்றி அத்தோடு நாம் தோல்வி"*

# *வெறுமனே அரசின் அலட்சியம் எனவும் கணிப்பிட முடியாது.... ஏனெனில் அரசாங்கமானது HDL பெற்றுக்கொண்ட பணத்திற்கு தாமே பொறுப்பு என பொறுப்பேற்றிருந்தது.*

*1992ம் ஆண்டின் பொதுநலவாய நாடுகளின் வர்த்தக சட்ட அறிக்கையில் மேலே குறிப்பிட்ட உச்ச நீதிமன்றின் வரலாற்று மயிற்கல்லான தீர்ப்பு உள்ளடங்கியூள்ளது – (1992) LRC (Comm) @636 – Amrasekara v Mitsui & Co Ltd and Others.*

636 Sri Lanka [1992] LRC (Comm)

**Sri Lanka** a

**Amerasekere v Mitsui & Co Ltd and Others**

Supreme Court b
G P S de Silva CJ, Amerasinghe and Kulatunga JJ
18, 19 November, 2 December 1992

(1) *Company law – Minority shareholder – Locus standi – Whether minority shareholder having locus standi to bring action on behalf of company.* c
(2) *Remedies – Injunction – Interim injunction – Minority shareholder seeking injunction to restrain payments by company to third parties – Principles to be applied – Whether prima facie case with real prospect of success.*
(3) *Remedies – Injunction – Interim injunction – Minority shareholder seeking injunction restraining company from making payments to foreign third parties – Whether damages an adequate remedy.* d

*பிறர் தொடர்பில் சட்ட நடவடிக்கைக்கு தேவை ஏற்படுவது ஒரு குறித்த நிறுவனத்தின் முகாமைத்துவத்தை கட்டுப்படுத்தும் இயக்குனர்கள் ஒரு மோசடியை செய்கின்ற போது அல்லது ஒரு மோசடி இடம்பெறுவதற்கு வழி அமைத்தது அதை தடுத்து நிறுத்தாமல் அல்லது அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றபோது, அந்த நிறுவனத்தின் பங்குதாரர் ஒருவர் நிறுவனத்தின் நன்மை கருதி நிறுவனத்திற்காக ஒரு வழக்கை தாக்கல் செய்ய முடியும் அப்படி செய்கின்றபோது அது பிறர் சார்பாக பதியப்படும் வழக்காகும்.*

*இதனை தொடர்ந்து 1997ம் ஆண்டு விடுதலை புலிகளால் நடத்தப்பட்ட குண்டு தாக்குதலின்போது கொழும்பின் மத்திய பகுதியிலிருந்த பல்வேறு கட்டிடங்கள் ஹில்டன் ஹோட்டல் உட்பட பாரிய சேதத்திற்குள்ளாகின. இதனை தொடர்ந்து வெளிநாட்டு காப்புறுதியார்களிடமிருந்து வியாபாரம் தடைப்படல் காப்புறுதி கொள்கையின் கீழ் அமெரிக்க டொலர் 10மில்லியனை பெற்றுக்கொள்ள ஹில்டன் சர்வதேச குழுமம் பேசித்தீர்மானித்திருந்தது.*

*ஜனவரி 16ம் திகதி 1998ம் கையொப்பமிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் ஹில்டன் சர்வதேசம் அமெரிக்க டொலர் 10மில்லியனிற்கு உரிமை கோரியதுடன்இ HDL ன் பங்குகளில் அமெரிக்க டொலர் 7மில்லியன் பெறுமதியையூம் மிகுதி 3மில்லியன் அமெரிக்க டொலரை காப்புறுதி பெறுமதியேற்றத்திற்கேற்றபடி 30 மாதங்களில் மீள செலுத்தும் அடிப்படையிலும் கோரியிருந்தது.*

COLOMBO
HILTON
SRI LANKA
*An Oasis in the City*

16th January 1998

Mr. Daya Liyanage
Chairman
Hotel Developers Lanka Ltd
COLOMBO 1

Dear Mr. Liyanage,

**COLOMBO HILTON**
**DAMAGE CAUSED TO THE RECENT BOMB BLAST.**

xxxxxxxxx

As also explained to you at that discussion, although Hilton has no legal obligation to contribute to the cost of reconstructionn and refurbishment of the Hotel, Hilton has negotiated, which will be for the well being of the Owners, payment of insurance money which will cover the cost of reinstatement. The likely cost of reinstatement is in the region of US$. 10 million.

xxxxxxxxx

In consideration of making available these insurance funds, Hilton requires US$ 3 million and repayment would be within a period of 30 months in consecutive monthly instalments of US$ 100,000/-. No interest will be payable on this money.

Hilton will not expect the balance sum paid to the Owning Company to be repaid in money, and will accept an allotment of shares in the Company in consideration of such sum.

xxxxxxxxxx

The participation by Hilton in the equity of the Owning Company in this manner will forge closer links between Hilton the Owning Company and also reflect the confidence Hilton has in its long term arrangements with the Owning Company.

xxxxxxxxx

Yours sincerely

ROY COXON
GROUP RISK MANAGER
HILTON INTERNATIONAL CO.

cc: Mr Gamini Fernando
General Manager & Division Director

*நூலாசிரியர் HDL ன் இயக்குனராக அத்தகைய உரிமத்துவத்தை எதிர்த்ததோடு சட்டமா அதிபரின் ஒப்புதலுடன் காப்புறுதி இழப்பீடானது HDL இற்கே சொந்தமானது எனவும் ஹில்டன் சர்வதேசத்துக்கு சொந்தம் இல்லை என்றும் நிலை நாட்டினார்.*

*இந்த இடையீட்டை HDL ன் இயக்குனர் என்ற வகையில் நூலாசிரியர் செய்யவில்லை என்றால், அன்றைய டாலர் மதிப்பீட்டின்படி ரூபா 61 படி 7 மில்லியன் டொலர் பெறுமதிக்கு HDL ன் பங்குகளை ரூபா 427 மில்லியனிற்கும் பங்கு முதலீட்டு தொகையான ரூபா மில்லியன் 452.3 இணையும் ஹில்டன் சர்வதேசத்திற்கு கொடுத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதோடு ஹில்டன் சர்வதேசம் பங்குகளின் 48.5% னையும் ஜப்பானிய கம்பெனிகள் 14.4% கொண்டிருந்திருக்கும் மாறாக இலங்கை அரசின் பங்குகளானது 33.4% இருந்திருக்கும் உரிமையை பெற்றுக்கொள்வதற்கு என்னவொரு சுழ்ச்சியை செய்திருக்கிறார்கள்.!*